குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**MC.No.9/2023**

வழக்கு சாட்சி ம.சா.1

2026ம் மே மாதம் 20 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னபொண்ணு | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 20.05.2026

**குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் பெயர் என்ன என்றால் அகிலேஷ். அவருடைய உண்மையான பெயர் அகிலேஷ்வரன் என்றும் அது கூட எனக்கு தெரியவில்லை என்றால் அவர் அப்படித்தான் மாற்றுவார். எனது சொந்த ஊர் குமராபாளையம் பஸ் ஸ்டேண்ட் பக்கத்தில் நான் பிறந்து வளர்ந்தது அங்குதான். குமாராபளையத்தில் நான் வசித்து வரும் இடமானது குமாராபளையம் கிழக்கு காந்திபுரம். எதிர்மனுதார் இருப்பிடம் எங்கு உள்ளது என்றால் பெருமாள் மலை பக்கத்தில் உள்ளது. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள பெருமாள் பாளையம், சூரியம்பாளையம், கோவில் ரோடு, அகிலேஷ் ஆதிகாம்ப்ளக்ஸ் என்ற விலாசம் பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் ஈரோடு நசியனூரில் தான் ரேசன்கார்டு, ஆதார்கார்டு உள்ளது, நான் சொல்லும் முகவரியில் அவர் இல்லை என்றால் சரியல்ல. அங்கிருந்து இன்னும் ரேசன்கார்டு, ஆதார்கார்டு மாற்றி வரவில்லை. 27.08.2015 தேதியில் ஈரோடு, பவானி ஆற்றங்ரை ஓரத்தில் உள்ள விநாயகர் கோவிலில் திருமணம் நடந்ததா சொல்லக்கூடிய அந்த கோயில் என்ன விநாயகர் என்றால் அந்த விநாயகர் என்ன விநாயகர் என்று தெரியாது. எங்களது திருமணத்திற்கு எனது உறவினர்கள் யாராவது வந்திருந்தார்களா என்றால் நெருங்கிய உறவினர்கள் வரவில்லை. வெறும் மஞ்சள் கோம்பில் தாலி கட்டினார். நான் என்ன சமுத்தை சேர்ந்தவர் என்றால் படையாச்சி சமுகத்தை சேர்ந்தவர். எங்கள் சமுகத்தில் தாலியை ஊர் பெரியவர்கள் எடுத்துகொடுக்கும் வழக்கம் உண்டு என்றால் என் திருமணத்தில் அவ்வாறு நடக்கவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் அவரது பெற்றோர்களோ உறவினர்களோ யாரும் வரவில்லை. எனது தரப்பில் இரண்டு அம்மா வந்தார்கள் அதுபோதும் என்று சொல்லிவிட்டார் புகைப்படம் எடுத்ததையும் அழித்துவிட்டார். புகைப்படம் யார் எடுத்தார்கள் என்றால் எதிர்மனுதாரே புகைகப்படம் எடுத்தார். எடுத்ததையும் செல்போனில் இருந்து அழித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் மசாஆ.2 புகைப்படத்தை எங்கு எடுத்தோம் என்றால் போலிஸ்டேசன் அருகே மணி போட்டோ ஸ்டுடியோவில் எடுத்தோம். அந்த கடைக்காரர் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகைப்படம்

எதிர்மனுதாரருடையது என்றால் சரிதான். **அந்த புகைப்படத்தின் நகல் எமசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதை வைத்து தான் மசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படத்தை சேர்த்து எடுத்தோம் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் என்ன வேலை செய்ககிறார் என்றால் 2019ல் இருந்து கம்பவுண்டராக பணிபுரிவதாக சொன்னார். முதலில் எங்கு பணியமர்த்தப்பட்டார் என்றால் திண்டல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியமர்த்தப்பட்டதாக சொன்னார். எதிர்மனுதாரர் நிரந்தர கூலிவேலையா, அல்லது தற்காலிக ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யக்கூடிய வேலைய என்றால் நிரந்தரவேலை தான். எதிர்மனுதாரர் 2016ம் வருடத்தில் சித்தோடு ஆரம்ப சுகாதர நிலையத்தில் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் என்ற வேலையில் தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையில் பணியில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாருக்கு ரூ.50,000/− மற்றும் அவருக்குகு சொந்தமாக காம்ப்ளக்ஸ், கார் உள்ளதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னைவிட 5 வயது இளையவர் என்றால் சரிதான். எதிர்மனுதாரை முதன் முதலில் எங்கு பார்த்தோன் என்றால் எங்களுடன் திருமண சமயல் வேலைக்கு வந்தபோது தான் பழக்கம். எதிர்மனுதாரர் நசியனுார் பவித்தரன் என்பவரிடம் வேலை செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கும் எனக்கும் திருமணம் செய்யும் அளவிற்கு பழக்கம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. குமராபாளையத்தில் உடையார் பேட்டை எங்கு உள்ளது என்றால் குமராபாளையம் போலிஸ்ஸ்டேன் அருகே உள்ளது. யாருடைய வீட்டில் வாடகைக்கு இருந்தோம் என்றால் தெரியாது. 10 வருடம் ஆகிவிட்டது ஞாபகம் இல்லை. உடையார் பேட்டையில் என்ன கோவில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் கருவுற்ற தேதி மாதம் தெரியுமா என்றால் 10 வருடம் ஆகிவிட்டது ஞாபகம் இல்லை. கார்த்திகை மாதம் 10 வருடத்திற்கு முன்பு. அதற்காக மருத்துவரை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஈரோடு ரயில் நிலையம் சுப்புலட்சுமி மருத்துவமனையில் பார்த்தேன். மருத்துவசீட்டு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதுவும் என்னிடத்தில் இல்லை எதிர்மனுதார் வாங்கிக்கொண்டார். வேறு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. தாக்கல் செய்துள்ள போட்டோவை தவிர எதுவும் இல்லை. நான் என் மனுவில் கூறியுள்ளபடி திருமணத்தின்போது எடுத்த புகைப்படம் மற்றும் வேறு ஆவணங்களை எதிர்மனுதாரும் அவரது தாயாரும் தீயில் போட்டு எரித்துவிட்டார்கள் அது எப்போது என்றால் 3 வருடம் ஆகிறது. நான் சொல்வதுபோல் எதுவும் நடக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. நசியனுாரில் எரித்தார்கள். எனக்கு போனில் வீடியோவாக காண்பித்தார்கள். திருணத்திற்காகன ஆதாரத்தை அழித்துவிட்டது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ரங்கம்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னிடம் ரூ.2,00,000/−பெற்றுக்கொண்டதாக சொல்லும் தேதி மாதம் வருடம் தெரியுமா என்றால் 10 வருடம் ஆகிறது. ஜலகண்டபுரத்தில் உள்ள சொத்தை விற்றுதான் பணம் கொடுத்தேன். ஆதற்கான ஆவணம் தாக்கல்

செய்யமுடியுமா என்றால் என்னிடம் இல்லை. 2021ல் இருந்து எனக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை. மனுவில் கர்பம் தரித்தவுடன் எதிர்மனுதாரர் விலகிச்சென்றுவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் முன்னுக்கு பின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னிடம் 7 பவன் நகையை அடித்து என்னிடம் பிடிங்கிக்கொண்டு சென்றதாக சொல்வதை நிரூபணம் செய்ய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் 7 வருடம் ஆகிவிட்டது. எனக்கு குழந்தை இறந்தே பிறந்தது என்பதை நிரூபணம் செய்ய மருத்துவ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2017ம் வருடத்தில் இருந்து சித்தோடு காவல் நிலையம், ஈரோடு ரங்கம்பாளையம் காவல் நிலையம், டவுன் காவல் நிலையம் ஈரோடு, காவல் துணை கண்காணிப்பாளர் ஈரோடு ஆகிய இடங்களில் எதிர்மனுதார் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட புகார்களில் எதிர்மனுதாரரோடு சேர்த்து வைக்க கோரி தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு சாட்சிய ஆவணம் இல்லை என முடித்து வைத்துவிட்டார்கள் என்றால் நீதிமன்றத்தின் மூலம் பிரச்சனை தீர்த்துக்கொள்ளுங்கள் என கூறினார்கள். நான் எதிர்மனுதார் வீட்டிற்கு சென்று ஜன்னல் கண்ணாடியை உடைத்தேன் என்றால் சரியல்ல. ஏன் ஆவணத்திற்கு தீ வைத்தீர்கள் என்று தான் கேட்டேன். நான் தான் எதிர்மனுதாரிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவருக்கும் அவரது குடுத்பத்தினருக்கும் பிரச்சனை ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாருக்கு எந்த வித பண உதவியும், 7 பவுன் நகையை பிடிங்கி சென்றுவிட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எங்களுக்குள் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்குள் நடந்த திருமணத்தை நிரூபணம் செய்யாத நிலையில் எதிர்மனுதாரரிடம் ஜீவனம்சம் பெற இயலாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ரூ.14,000/- தான் சம்பளம் வாங்கிவருகிறார் என்றால் சரியல்ல. நான் எங்கள் சமூகவலக்கப்படி கட்டுபொண்ணு என்றால் சரிதான். கட்டுபொண்ணு என்ன என்றால் ஏற்கனவே திருமணம் ஆனவர். யாருடன் முதல் திருமணம் என்றால் பவானியை சேர்ந்த சந்திரன். 15 வருடம் முன்பு திருமணம் ஆனது அவர் காலமாகிவிட்டார். எனக்கும் சந்திரனுக்கும் இரண்டு குழந்தைகள் என்றால் இல்லை. பவானியில் சந்திரனுடன் எங்கு வசித்தேன் என்றால் செங்காடு பகுதியில் வசித்தோம். அவருடன் ரேசன்கார்டு, வாக்காளர் அடையாள அட்டை இருந்ததா என்றால் இல்லை. சந்திரன் தான் என்னுடைய கணவர் எதிர்மனுதாரர் என்னுடைய கணவராக எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் சந்திரன் இறக்கவில்லை என்றும் அவர் உயிரோடு தான் இருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடைய நடவடிக்கை மற்றும் குணாதிசயம் சரியில்லை என்று தான் என் கணவர் என்னை விட்டு பிரிந்துவிட்டார் என்றால் சரியல்ல. அகிலேஷ் என்ற பெயரை என்னுடைய ஆதார்கார்டில் சேர்த்துக்கொண்டு பொய்யான விபரத்தை கூறி இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. ஈரோடு மாவட்ட ஆட்சியர் மனு கொடுத்ததோடு சரி நான் விசாரணைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். மசாஆ.3 அந்த மனுவின் விசாரணைக்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் திருமணம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரை கட்டாயப்படுத்தி அவருடன் வாழ முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு சொத்து இருப்பதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வழக்கு பொய் வழக்கு என்றும், அவர் ஜீவனாம்சம் தர கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல.